INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

ANNUAL EXAMINATION - MARCH - 2009

Class – VI தமிழ் Max – Marks : 100
Time : 3 Hours

---

I . பொருள் கூறுக : 2 ½ Marks

1. துவாரம் 2. உவகை 3. அஞ்சாது 4. மாய்ந்தது 5. உன்னதம்

II . எதிர்ச் சொல் எழுதுக : 2 ½ Marks

1. இளைத்திருந்தது 2. புதிய 3. சிலர் 4. முடிவு 5. கூச்சல்

III . பிரித்து எழுதுக : 2 ½ Marks

1. வீட்டுக்கொரு 2. செங்கதிர் 3. சிற்சில 4. பதிலேதும்
5. கூச்சலிட்டு

IV . சேர்த்து எழுதுக : 2 ½ Marks

1. கடல் + கரை 2. மூன்று + கடல் 3. நன்று + என்று
4. பல + பல 5. பேருக்கு + ஒரு

V . புதிரை விடுவி : 8 Marks

1. தண்டனை பெற்றுச் சிறையில் இருப்பவர்.
2. பாம்பு இதற்குள் இருக்கும் .
3. இதைப் பிடிக்க பொறி வைத்துப் பிடிப்பர் .
4. மரங்களுக்கெல்லாம் அரசன் .
5. பொங்கலுக்குப் புதியதாக செய்த நெல்லைப் பயன்படுத்தவர் .
6. இதைக் கண்டால் பனி விலகும் .
7. மயிலுக்குப் போர்வை தந்தவன் .
8. கடலிலிருந்து கிடைக்கும் . இதை ஊதினால் ஒலி எழுப்பும் .

VI. பொருத்தமான சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கு.

6 Marks

1. கட்டு   கண்ணாடி
2. செய்தி   பெட்டி
3. தேன்   தாள்
4. வால்   கூடு
5. தீ   சோறு
6. மூக்கு   நட்சத்திரம்

VII. திருத்தி எழுதுக : 5 Marks

1.கொடை 2.காத்து 3.தலகாணி 4.கொடம் 5.வெத்தல

VIII. ஏனெனில் / எனவே எனும் சொற்களை இணைத்து எழுதுக : 4 Marks

1.தாத்தாவுக்கு பற்கள் இல்லை , ____________ அவரால் முறுக்குத் தின்ன முடியாது.
2.கலா பள்ளிக்கு வரவில்லை , ____________ அவனுக்கு உடல் நலம் சரியில்லை.
3.காரிருள் மறைந்தது. ____________ கதிரவன் தோன்றியது.
4.கமலாவிடம் பணம் இல்லை.____________ அவள் பொம்மை வாங்கவில்லை.

IX. நிறுத்தற் குறியிடுக. 4 Marks

வேலன் மாலா சையது மூவரும் இணை பிரியா நண்பர்கள்
ஒரு நாள் மூவரும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த பொழுது மாலா
ஆ என அலறினாள் வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு வாகனம்
மாலாவின் மீது மோதியது பலத்த அடி ஒன்றும் ஏற்படாவிடினும்
வாகனம் ஓட்டுனரின் செயலுக்காக அவர் காவலர்களால்
பிடிக்கப் பட்டார் மாலா மருத்துவ மணைக்கு அழைத்துச் செல்லப் பட்டாள்

X. கோடிட்ட இடம் நிரப்புக : 4 Marks

1. ____________________ இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்கும்.
2.அளவான ____________ வளமான வாழ்வு.
3.மண விழாவிற்கு விருந்தினர் ____________ வந்திருந்தனர் .
4.நடந்து நடந்து கால் ______________ போச்சு.

XI. அடைப்புக்குள் இருக்கும் சொற்களை பொருத்தமான இடத்தில் எழுதுக : 4 Marks

( பெரு மழையால் - தாயைக் காணாமல் - குளிரால் - சிங்கத்தின் குரலால் )

1.____________________ குழந்தை அழுதது.
2.____________________ உடல் நடுங்கியது.

3. ____________________ வெள்ளம் வந்தது.
4. ____________________ விலங்குகள் பயந்து ஓடின.

XII. கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுக. 3 Marks

1. குடம் - கூரை - குருவி
2. கண் - மலை - எறும்பு

XIII. விடையளி : ( ஏதேனும் 8 ) 3 8 24 Marks

1. விளம்பரம் செய்யப் பயன்படும் சாதனங்களை எழுதுக.
2. முத்துவும் முபாரக்கும் எதனை வேடிக்கைப் பார்த்தனர் ?
3. படைத் தலைவர் ஏன் அலறித் துடித்தார் ?
4. கன்னியாகுமரியில் காணும் காட்சிகள் யாவை ?
5. ஓணான் சிறுவர்களைப் பார்த்து என்ன சொல்வது போல் இருந்தது ?
6. தீயவை தீயினும் அஞ்சப்படும். ஏன் ?
7. ஒழுக்கம் எனத் துவங்கும் திருக்குறளையும் , தொழில் என முடியும் குறளையும் எழுதுக .
8. சிறுவர்களிடம் மீனா என்ன கூறினாள் ?
9. கன்னியாகுமரியில் கதிரவன் காட்சியளிப்பதில் உள்ள சிறப்பு யாது ?

கட்டுரைப் பகுதி

1. உன் தோழி / தோழனுக்கு உன்னுடைய பிறந்த நாள் விழாவிற்கு அழைப்பு விடுத்து ஒரு கடிதம் வரைக.
8 Marks

அல்லது

உன் தோழி / தோழனை தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற வாழ்த்து கூறி ஒரு கடிதம் வரைக .

2. உன் வாழ்வில் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சி. 8 Marks
( 10 வரிகள் )

அல்லது

தென்னை மரம் தன் பயன்களைக் கூறுவது போல் ஒரு கட்டுரை வரைக. ( 10 வரிகள் )

3. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
6 Marks

- வள்ளி ஆட்டுக் குட்டியைத் தூக்கினாள்.
- பறவை கூடு கட்டியது.
- குரங்கு வாழைப் பழத்தைத் தின்றது.
- இளங்கோ கூடை பின்னினான்.
- பாலன் படத்தை வரைந்தான்.
- மாலா தோசை சுட்டாள்.

- சையது சட்டை தைத்தார்.
- அப்பா செய்தித் தாள் படித்தார்.
- வேலன் பொம்மை விற்றான்.
- கண்ணன் மீன் பிடித்தான்.

வினாக்கள் :

1. அப்பா எதைப் படித்தார் ?
2. பொம்மை விற்றவர் யார் ?
3. பாலன் எதை வரைந்தான் ?
4. எது கூடு கட்டியது ?
5. மாலா என்ன செய்தாள் ?
6. ஆட்டுக் குட்டியைத் தூக்கியது யார் ?

4. கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளி : 6 Marks



1. படத்தில் உள்ள வீடுகளின் வகைகள் யாவை ?
2. படத்தில் உள்ள நிகழ்ச்சிகள் எந்த நேரத்தில் நடைபெறுகின்றன ?
3. படத்தில் இடம் பெற்றுள்ள நகரும் பொருள்கள் யாவை ?
4. கோலம் போடும் பெண்ணிடம் உள்ள வாளியில் நீர் இல்லை. ஏன் ?
5. சேவல் எங்கு அமர்ந்துள்ளது ?
6. குழாயடியில் எத்தனை பேர் உள்ளனர் ?

***************